60—

60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்களுக்கு ஓய்வூதியம்.

*17571—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : வயது முதிர்ந்த மீனவர்களுக்கு உதவிடும் வகையில் முதியோர் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 11-25

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலமான கேரளாவில் இதை பல ஆண்டுக்காலமாக கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய அரசும் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இது எப்போது நடைமுறைக்கு வர இருக்கிறது. ஒருவருக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்க அரசு உத்தேசித்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை வைக்காமலேயே இன்றைக்கு தமிழகத்திலுள்ள மீனவர்களுடைய வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடைய வேண்டுமென்றும், அவர்கள் சமூகத்திலே ஒரு உயர் நிலையை எட்டவேண்டுமென்றும் இன்றைக்கு அயராது உழைத்துக்கொண்டு இருக்கிற நமது தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மீனவர் ஓய்வு ஊதியத் திட்டம் என்ற ஒன்றினை, எவருமே இந்த அவையிலே கேட்காததை, யாரும் கேட்காமலேயே, இதை நீங்கள் உடனடியாக நிறைவேற்றவேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே மீன் துறை இயக்குநரிடமிருந்து கருத்துரு கோரப்பட்டுள்ளது. கருத்துரு அரசுக்கு வந்தவுடன் விரைவாக வெளியிடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1993 அக்டோபர் 28]

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் என்று கேள்வி கேட்டிருந்தேன். அதோடு, மீனவர்கள் மீன்பிடிக்கப் போகின்றபோது ரஃப் ஸீ அதாவது நேச்சுரல் கலாமிட்டியிலே மாட்டி கை, கால் உடைந்து கஷ்டப்படுகின்ற மீனவர்களும் இந்த ஒய்வு ஊதியத் திட்டத்தில் சேர்க்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மட்டும் கிட்டத்தட்ட 18 ஆயிரம் வயதான மீனவர்களுக்கு ஒய்வு ஊதியம் வழங்குவதற்கு கருத்துரு ஆராயப்பட்டு வருகின்றது. இதற்கு ஆகின்ற மாதச் செலவு 18 இலட்ச ரூபாய் ஆகும். இந்த 18 இலட்சம் ரூபாயை தமிழகத்திலே கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினராக இருக்கின்ற ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மீனவர்கள் மாதந்தோறும் 5 ரூபாய் செலுத்தி, அதன் மூலம் அவர்கள் செலுத்துகின்ற தொகை 9 இலட்சம் ரூபாய் ஆகும். இதற்கு நமது மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசும் மைய அரசும் சமமாக 50 விழுக்காடு நிதி அளிக்கலாம் என்று கருதப்படுகின்றது. அந்த அடிப்படையிலே மாதந்தோறும் மீனவர்களுக்கு 100 ரூபாய் வழங்குவதற்கு உத்தேசித்துக்கொண்டிருக்கிறோம். அத்தோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேச்சுரல் கலாமிட்டியிலே சிக்குகின்ற மீனவர்களுக்கும் இந்தத் திட்டம் பயன்படுமா என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ், மீனவர்கள் எதிர்பாராதவிதமாக தொழிலாற்றும் போது மரணம் அடைய நேர்ந்தால் அவர்களுக்கு கருணையுள்ளத்தோடு நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 25 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு உத்திரவிட்டுள்ளார்கள். அது மட்டுமல்ல, காயமுற்ற மீனவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கும் உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே அவர்கள் எதிர்பாராதவிதமாக காயமுற நேரிட்டால், மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் அவர்கள் பயன் பெற இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1, திரு. எஸ். டேனியல்ராஜ், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.